28.08.2025

**CC No.106/2024**
**ம.சா.1 அபிலாஷ் த/பெ. ஆனந்த்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படித்து 2023 ல் முடித்தேன். நான் காரைக்குடியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். மேற்படி முகவரியில் நான் , எனது தாத்தா, மற்றும் எனது பாட்டி ஆகியோருடன் வசித்து வருகிறேன். என் தாத்தா பெயர் கிருஷ்ணசாமி, எனது தாத்தா என்ன தொழில் செய்கிறார் என்றால் மரக்கடை வைத்திருந்தார். தற்போது மேற்படி கடையை நான் கவனித்து வருகிறேன். என் தாத்தா எத்தனை ஆண்டுகளாக மேற்படி தொழிலை செய்து வருகிறார் என்றால் 30 ஆண்டுகளாக கவனித்து வந்தார். நான் மேற்படி தொழிலை என் தாத்தாவின் உடல் நலக்குறைவின் காரணமாக கடந்த 2021 முதல் கவனித்து வருகிறேன். மேற்படி விபரத்தை எதிரிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது வழக்கறிஞரிடம் சொன்னேன்.

2) எதிரிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்று சொன்னாலும், எனது தாத்தாவிற்கும் எதிரிக்கும்தான் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2023 வரை எதிரி எனது தாத்தாவிடம் நல்ல முறையில் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார். அந்த நம்பிக்கையின் பேரில் எதிரி என்னை அனுகியபோது 2023 ஆண்டு அக்டோபர் மாதம் எதிரிக்கு பணம் கொடுத்தேன். மேற்படி தேதியில் நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்திற்கு உண்டான எனது வருவாய் நிலையை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி கட்டிட ஒப்பந்த தொழில் செய்வதால் அவர் எனது தாத்தாவிடம் கதவு, ஜன்னல் போன்ற மரச்சாமன்களை பெற்று தொழில் செய்து வந்ததால் 2015 ம் ஆண்டு முதல் எதிரிக்கும் எனது தாத்தாவிற்கும் மட்டுமே தொழில் ரீதியான கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். அந்த சமயம் நான் படித்துக்கொண்டிருந்தேன்.

3) எனது தாத்தா கிருஷ்ணமூர்த்தி மரவியாபாரம் மற்றும் வட்டிக் பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் பொருட்டு எதிரி கடந்த 2018ம் ஆண்டு என் தாத்தா கிருஷ்ணமூர்த்தியிடம் ரூ. 4 லட்சம் கடன் வாங்கினார் என்று சொன்னால் சரிதான் மேற்படி பணத்தை அவர் திருப்பி செலுத்திவிட்டார். எதிரி என் தாத்தாவிடம் பெற்றிருந்த கடனிற்காக பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டு, மற்றும் IDBI வங்கியின் காசோலைகளை என் தாத்தாவிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அந்த கடனுறுதிசீட்டு மற்றும் காசோலைகளை அவர் பணத்தை திருப்பி செலுத்திய உடன் திருப்பி பெற்றுக்கொண்டார். எதிரியின் IDBI வங்கி கணக்கு எண். 0283104000536 ஆகும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி எதிரி என் தாத்தாவிடம் வாங்கிய கடனை வாரம் ஒன்றிற்கு ரூ. 5 ஆயிரம் வீதம் என் தாத்தாவின் வங்கி கணக்கிற்கு G-Pay மூலம் அளித்து வந்ததார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு எதிரி பணம் செலுத்தி வந்த நிலையில் கடந்த 14.08.2020 அன்று எதிரி கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு காரைக்குடியில் உள்ள காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கொரோனா தாக்கல் 80 சதவீதம் இருந்ததால் எதிரியை சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) அவ்வாறான நிலையில் நான் சொல்வதுபோல் கடந்த 10.10.2023ம் தேதி எதிரியின் தொழில் தேவைக்காக ரூ. 4 லட்சம் 1.50 மாத வட்டி வீதம் பெற வாய்ப்பில்லை என்று சொன்னாலும், அதனை 6 மாத தவணையில் திருப்பி செலுத்திவிடுவதாக சொல்லி 10.042024 அன்று, 10.05.2024, 10.06.2024, 10.072024 ஆகிய தேதியிட்ட 4 காசோலைகளை பூர்த்தி செய்து என்னிடம் எதிரி கொடுத்தாக சொல்லப்படுவது நம்பும்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலைகளை எதிரி என்னிடம் பெற்ற கடனிற்காக கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு காசோலைகலான ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகியவற்றில் உள்ள கையெழுத்து மட்டுமே எதிரியுடையது மற்ற விபரங்கள் எதுவும் எதிரி பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் தாத்தாவிடம் வாங்கிய கடனை நேரிலும், G-Pay மூலமாகவும், அவரது கண்காணிப்பாளர் மூலமாகவும், நேரிலும்

மேற்படி எதிரியின் கண்காணிப்பாளரின் G–Pay மூலமாகவும் செலுத்திவிட்டார் என்று சொன்னால் என் தாத்தாவிடம் வாங்கிய கடனை அவர் செலுத்திவிட்டார். எவ்வாறு செலுத்தினார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

5) எதிரி என் தாத்தாவிடம் பெற்ற கடனை பல்வேறு தேதிகளில் மேற்சொன்ன விபரங்களின் அடிப்படையில் ரூ. 2 லட்சத்து 17 ஆயிரம் வரை செலுத்திவிட்டார் என்று சொன்னால் என் தாத்தாவின் வரவு செலவிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சொன்ன தேதியில் சொல்லியவாறு எதிரி என்னிடம் ரூ. 4 லட்சம் கடனாக பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கடன் தொகை எதிரிக்கும் என் தாத்தா கிருஷ்ணசாமிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல் மட்டுமே என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரி என் தாத்தாவிடம் பெற்ற ரூ. 4 லட்சம் கடனிற்கு அசல் மற்றும் வட்டி தொகையாக இதுநாள் வரை ரூ.12 லட்சம் வரை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் எதிரியை குண்டர்களை வைத்து மிரட்டுவதை நிறுத்தி கொள்ளாவிட்டால் என் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். எனவே எதிரிக்கு ரூ. 4 லட்சம் கொடுக்கும் அளவிற்கு போதிய நிதி நிலைமை என்னிடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்திவருகிறேன். மேற்படி வருமான வரி குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இது வரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனவே சட்டப்படியாக திருப்பி செலுத்தக்கூடிய எவ்வித கடமையும் எதிரிக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.28 14:30:13 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)